جمعية خدمة المحتوى
الإسلامي باللغات

# இஸ்லாம்

## மனித இயல்பு, பகுத்தறிவு, மற்றும் மகிழ்ச்சியினது மதமாகும்

தமிழ்

تاميلي

الإِسْلاَمُ دِينُ الفِطْرَةِ وَالعَقْلِ وَالسَّعَادَةِ

பல்மொழிகளில் இஸ்லாமிய
உள்ளடக்கத்திற்கு சேவை
செய்வதற்கான சங்கத்தின் கல்விக் குழு

الإِسْلَامُ

دِينُ الفِطْرَةِ وَالعَقْلِ وَالسَّعَادَةِ

# இஸ்லாம்

## மனித இயல்பு, பகுத்தறிவு, மற்றும் மகிழ்ச்சியினது மதமாகும்


اللَّجْنَةُ العِلْمِيَّةُ

بِجَمْعِيَّةِ خِدْمَةِ المُحْتَوَى الإِسْلَامِيِّ بِاللُّغَاتِ

**பல்மொழிகளில் இஸ்லாமிய உள்ளடக்கத்திற்கு சேவை செய்வதற்கான சங்கத்தின் கல்விக் குழு**

بِسْمِ اللهِ الرَّحمَنِ الرَّحِيمِ

# இஸ்லாம்

## மனித இயல்பு, பகுத்தறிவு, மற்றும் மகிழ்ச்சியினது மதமாகும்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் (ஆரம்பிக்கிறேன்)

எப்போதாவது நீ உன்னையே

இந்த வானங்களையும் பூமியையும் அதிலுள்ள பிரமாண்டமான படைப்புக்களையும் படைத்தவன் யார்? இப்பிரபஞ்சத்தின் மிகத்துல்லியமானதும் கட்சிதமானதுமான இந்த ஒழுங்கை அமைத்தவன் யார் என்ற கேள்வியை கேட்டதுண்டா?

மேலும் இம்மாபெரும் பிரபஞ்சமானது அதன் விதிகளுக்கமைவாக பல ஆண்டுகளாக மிகவும் துல்லியமாக கட்டுக்கோப்புடன் இயங்கி நிலைபெறுவதற்கு எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது? என்ற கேள்வியை கேட்டதுண்டா?

இப்பிரபஞ்சம் தானாக உருவானதா? அல்லது ஏதுமில்லாத ஒன்றின் மூலம் உருவானதா? அல்லது தற்செயலாக வந்ததா? (இது போன்ற வினாக்களுக்கு சுருக்கமாக விடை தேடுகிறது .இக்கையேடு! )

## உம்மைப் படைத்தவன் யார்?

உமது உடலினுள்ளும் ஏனைய உயிரினிங்களின்

உடலினுள்ளும் காணப்படும் கூறுகளில்; இந்த நுணுக்கமான ஒழுங்கை –முறைமையை- அமைத்தவன் யார்?

ஒருவர் ஒரு வீட்டை காட்டி இந்த வீடு எவரும் கட்டாமல் உருவானது என்று கூறினால் அல்லது இல்லாமை இந்த வீட்டை உருவாக்கியது என்று கூறினால் யாரும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! அவ்வாறாயின் இந்த மாபெரும் பிரபஞ்சம் படைப்பாளன் ஒருவன் இல்லாமல் உருவானது என்று கூறுபவர்களை எப்படி நம்ப முடியும்? ஒரு பகுத்தறிவுள்ள ஒருவர்-புத்தியுள்ளவர்- பிரபஞ்சத்தின் இந்த துல்லியமான ஒழுங்கமைப்பானது தற்செயலாக வந்தது என்று கூறுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இப்பிரபரபஞ்சத்தையும் அதிலுள்ளவற்றையும் படைத்து திட்டமிட்டு நிர்வகிக்கும் மகத்தான ஒரு இறைவன் உண்மையில் உள்ளான். அவன்தான் உயர்வும் மகத்துவமிக்க அல்லாஹ்.

அந்த இறைவன்தான் எமக்கு வழிகாட்ட தூதர்களை அனுப்பியதோடு அவர்களுக்கு இறைவேதங்களையும் அருளினான். அவ்வாறு இறக்கியருளப்பட்ட வேதங்களுள் இறுதியானது அல் குர்ஆன் ஆகும். அதனை அல்லாஹ்வின் இறுதித்தூதர் முஹம்மத் மீது இறக்கியருளினான். அல்லாஹ்வின் வேதங்கள் மற்றும் தூதர்களினூடாக :

அவனைப்பற்றியும், அவனின் பண்பகள் பற்றியும், அவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைப்பற்றியும் அவன் நமக்கு செய்யவேண்டிய கடமைப்பற்றியும்

எமக்கு அறிவித்தான்.

அவன் (அல்லாஹ்) படைப்புகளைப் படைத்து பரிபாலிப்பவன் என்றும், அவன் மரணம் தழுவாத நித்திய ஜீவன் என்றும், படைப்புகள் யாவும் அவனின் முழுமையான கட்டுப்பாட்டுக்கு கீழும், அதிகாரத்திற்கு உட்பட்டும் உள்ளன எனவும் அவன் எங்களுக்கு வழிகாட்டினான்.

அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றாக அறிவு காணப்படுகிறது. எனவே அவன் எல்லா விடயங்கள் பற்றியும் சூழ்ந்தறிந்தவனாக உள்ளான். அவன் யாவற்றையும் செவியுறுபவன், பார்ப்பவன், வானம் மற்றும் பூமியில் எந்த ஒன்றும் அவனுக்கு மறைந்ததாக இல்லை என்று எமக்கு அவன் அறிவித்துத் தந்துள்ளான்.

அல்லாஹ் படைப்புகளை படைத்து இரட்சிக்கும் இறைவன், உயிருடன் இருப்பவன் நிலையானவன், நிர்வகிப்பவன் போன்ற தனித்துவப்பண்புகளைப் பெற்ற தன்னிகரற்றவன் என்றும் எமக்கு அறிவித்துள்ளான். அந்த வகையில் ஒவ்வொரு உயிரினங்களும் அவனிடமிருந்தே உயிரைப் பெருகின்றன. அவன் மூலமே ஒவ்வொரு உயிரினங்களும் நிலைத்து நிற்கின்றன. இது குறித்து அலலாஹ் பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறான் :

﴿اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ لَا تَأْخُذُهُ سِنَةٌ وَلَا نَوْمٌ لَهُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ مَنْ ذَا الَّذِي يَشْفَعُ عِنْدَهُ إِلَّا بِإِذْنِهِ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ وَسِعَ كُرْسِيُّهُ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَلَا يَئُودُهُ

حِفۡظُهُمَاۚ وَهُوَ ٱلۡعَلِيُّ ٱلۡعَظِيمُ ﴿٢٥٥﴾

'அல்லாஹு லாஇலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம், லா தஃஹுதுஹு ஸினத்துவ் வலா நவ்ம், லஹு மாபிஃஸ் ஸமாவாதி வமாபில் அர்ழி, மன் தல்லதி யஷ்பஃஉ இன்தஹு இல்லா பி இதினிஹி, யஃலமு மாபய்ன அய்தீஹிம் வமா கல்பஹும், வலா யுஹீதூன பிஷய்இம் மின் இல்மிஹீ இல்லா பிமா ஷாஅ, வஸிஅ குர்ஸிய்யுஹுஸ் ஸமாவாதி வல்அர்ழ வலா யஊதுஹு ஹிப்லுஹுமா வஹுவல் அலிய்யுல் அழீம்'. (பொருள் :(உண்மையாக) வணங்கப்படத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் என்றும் உயிருடன் இருப்பவன், நிலைத்திருப்பவன். சிறுதூக்கமோ, உறக்கமோ அவனை ஆட்கொள்ளாது. வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடம் யார்தான் பரிந்துரை செய்யமுடியும்? (படைப்பினங்களான) அவர்களுக்கு முன் உள்ளவற்றையும் அவர்களுக்குப்பின் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் நாடியவற்றைத் தவிர அவன் அறிந்திருப்பவற்றில் எதையும் அவர்களால் அறியமுடியாது. அவனது குர்ஸி வானங்களையும் பூமியையும் வியாபித்திருக்கின்றது. அவையிரண்டையும் பாதுகாப்பது அவனுக்கு சிரமமன்று. அவன் மிக உயர்ந்தவன்;மிக்க மகத்துவமானவன்). (பகரா :255).

அல்லாஹ் எனும் இரட்சகன்-இறைவன்-

குறைகளற்ற நிறைவான பண்புகளைக் கொண்டவன் என்பதையும் எமக்கு அறிவித்துத்தந்துள்ளான். அவனே எமக்கு பகுத்தறிவையும்,அவனின் படைப்புகளின் அதிசியங்களையும், அவனின் வல்லமையும் பகுத்துணர புலன்களையும் தந்துள்ளான் அவைகள்; அவனின் மகிமையையும் அவனின் ஆற்றலையும், அவனின் முழுமையானபண்புகளையும் அறியத்தருகிறது. அவனே எம்முள்ளே பித்ரா (இயழ்புணர்வை) விதைத்துள்ளான், அது அவனின் குறைகளற்ற நிறைவான பண்பை பறைசாற்றும் விடயமாகும்.[1]

இறைவனான அல்லாஹ் வானங்களுக்கு அப்பால் உள்ளான் என்றும், அவன் உலகினுள்ளே சங்கமிக்கவில்லை எனவும், உலகமும் அவனுள் சங்கமிக்கவில்லை என்றும் எமக்குக் கற்றுத் தந்துள்ளான்.[2]

மேலும் எம்மையும் இப்பிரபஞ்சத்தைப்படைத்து நிர்வகிப்பவன் என்பதால் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பது கடமை என்பதை எமக்கு அறிவித்துத்தந்துள்ளான்.

படைப்பாளனுக்குரிய மகத்துவம், மகிமையைப் பறைசாற்றும் தனித்துவமானதும் நிறைவானதுமான பண்புகள் உண்டு. அவன் ஒரு போதும் தேவை அல்லது

---

1 அல்பித்ரா என்பது அல்லாஹ் ஒவ்வொரு மனிதரிலும் இயற்கையாக படைத்து வைத்திருக்கும் "இறையுணர்வு"

2 அதாவது சிருஷ்டிகர்த்தாவும் சிருஷ்டிகளும் வேவ்வேறானவை என்ற தத்துவத்தை எமக்கு கற்றுத்தந்துள்ளான்' இதனை தெளிவாகக் கூறின் சிருஷ்டிகள் ஒரு போதும் கடவுளாக பரிணமிப்பதில்லை

குறை போன்ற பண்புகளினால் வர்ணிக்கப்படுவதைவிட்டும் தூய்மையானவன். அந்த வகையில் இஸ்லாத்தின் கடவுள் -இறைவன் என்பவன் மறதி எனும் பண்பிற்கு அப்பாட்பட்டவன், அவன் தூங்கமாட்டான் உணவு உண்ணவும் மாட்டான். அவனுக்கு மனைவி அல்லது சந்ததி என்பதும் கிடையாது. இவ்வாறான கடவுளின் தனித்துவத்திற்கு முரணாக இடம் பெற்ற செய்திகள் இறைத்தூதர்கள் கொண்டு வந்த உண்மையான இறைத்தூதிற்கு உட்பட்டது அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :

﴿قُلۡ هُوَ ٱللَّهُ أَحَدٌ ١ ٱللَّهُ ٱلصَّمَدُ ٢ لَمۡ يَلِدۡ وَلَمۡ يُولَدۡ ٣ وَلَمۡ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدُۢ ٤﴾

(நபியே! மனிதர்களை நோக்கி) கூறுவீராக: அல்லாஹ் ஒருவன்தான்.

(அந்த) அல்லாஹ் (எவருடைய) தேவையுமற்றவன். (அனைத்தும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன.)

அவன் எவரையும் பெறவுமில்லை அவன் எவருக்கும் பிறக்கவுமில்லை

மேலும் அவனுக்கு நிகராக எவருமில்லை. (இஃலாஸ் : 1- 4).

இப்பிரபஞ்சத்தைப் படைத்து பரிபாளிப்பவனை – அல்லாஹ்வை- நீ நம்பிக்கை கொள்வதாக இருந்தால் --

எப்போதாவது ஒரு தினம் உம்மை அவன் படைத்ததன் நோக்கத்தை பற்றி சீர்தூக்கி பார்த்திருக்கிறாயா? அல்லாஹ் எம்மிடம் எதனை விரும்புகிறான்? நமது இருப்பின் இலக்குதான் என்ன?

**அல்லாஹ் எம்மைப்படைத்து விட்டு பின் எம்மைப் பொருட்படுத்தாது புறக்கணித்து விட்டிருக்க முடியுமா? அல்லது இந்த உயிரினங்கள் அனைத்தையும் எவ்வித நோக்கமோ இலக்கோ இல்லாது படைக்கப்பட்டிருக்க முடியுமா?**

உண்மை இதுதான். மகத்தான சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ் எம்மைப் படைத்திருப்பதன் நோக்கத்தை குறித்து எமக்கு அறியத்தந்துள்ளான். அந்த நோக்கம் என்ன? அதுதான் அவனை மாத்திரம் கடவுளாக ஏற்று வணங்கி வழிபடுவது! அவன் எம்மிடம் எதை விரும்புகிறான்? அவனை மாத்திரம் வணங்குவதற்கு தகுதியானவனாக ஏற்றுக்கொள்வதை விரும்புகிறான். அதுமாத்திரமின்றி அவனை எப்படி வணங்க வேண்டும் என்பதையும், அவனின் ஏவல்களை ஏற்றும் தடுத்தவற்றை தவிர்ந்தும் நடப்பதற்கும், அவனின் திருப்பொருத்தத்தை அடைந்து கொள்வதற்கான வழிமுறை குறித்ததும்; அவனின் தண்டனை குறித்து எச்சரிக்கையாக நடந்து கொள்ளும் வழிகள் பற்றிய எல்லா விடயங்கள் தொடர்பாகவும் தனது தூதர்கள் மூலம் எமக்கு அறிவித்துத் தந்துள்ளான். மேலும் மரணித்ததின் பின்னரான எமது இறுதி முடிவு குறித்தும் அவன் எமக்கு அறிவித்துத்துத் தந்துள்ளான்.

இவற்றுடன், இவ்வுலக வாழ்வு வெறுமனே ஒரு சோதனை –பரீட்சை- என்பதையும் உண்மையான –முழு நிறைவான வாழ்வு மரணத்தின் பின்னரான மறுமையில் உள்ளது என்பதையும் எமக்கு அறிவித்துத்துந்துள்ளான்.

மேலும் யார் அல்லாஹ்வை அவனின் கட்டளை பிரகாரம் வணங்கி அவன் தடுத்தவற்றிலிருந்து முற்றாக விலகி நடக்கிறாரோ அவருக்கு இவ்வுலகில் நல்வாழ்வும், மறுமையில் நித்திய பேரின்பமும் உண்டு. யார் அவனுக்கு மாறு செய்து அவனைப் புறக்கணிக்கிறாரோ அவனுக்கு உலகில் துன்பமும் மறுமையில் நித்திய தண்டனையும் உண்டு என எமக்கு அல்லாஹ் அறியத்தந்துள்ளான்.

**இவ்வுலக வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் அவரவர்; செய்த நன்மை அல்லது தீமைக்கான வெகுமதியை -கூலியை- பெறாது கடந்து சென்று விட முடியாது என்பதை நாம் அறிவோம். அவ்வாறு நன்மை தீமைக்கான வெகுமதி இல்லையென்றால் அநியாயக்காரர்களுக்குரிய தண்டனையும் நல்லோருக்கான வெகுமதியும் கிடைக்காமல் போகுமல்லவா?**

அதற்கான வழியையையும் எமது இறைவன் அறிவித்துத்துத்தந்துள்ளான். அது என்ன? அவனின் திருப்பொருத்தைத் அடைந்து வெற்றி பெறவும் அவனின் தண்டனையிருந்து தப்பித்துக்கொள்வதற்கான ஒரே வழி அவனின் மார்க்கமான புனித இஸ்லாத்தினுள் நுழைந்து விடுவதாகும். இஸ்லாம் என்பது அவனுக்கு

முழுமையாக கட்டுப்பட்டு, அவனுக்கு நிகராக எவரையும் கூட்டுச்சேர்க்காது அவனை மாத்திரம் வணங்குவதும், வணக்கத்தின் மூலம் பணிந்து நடப்பதும், அவனின் சட்டதிட்டங்களை முழுமையான ஒப்புதலுடன் திருப்தியாக ஏற்று நடப்பதுமாகும். இஸ்லாத்தை தவிர்த்து எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் மனிதர்களிடம் ஏற்றுக்கொள்வதில்லை என்பதையும் அவனின் உலகப்பொதுமறையில் பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறான் :

﴿وَمَن يَبْتَغِ غَيْرَ ٱلْإِسْلَٰمِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِى ٱلْءَاخِرَةِ مِنَ ٱلْخَٰسِرِينَ ٨٥﴾

(யார் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக ஏற்க விரும்புகிறானோ அது அவனிடமிருந்து அங்கீகரிக்கப்படமாட்டாது. அவன் மறுமையில் நஷ்டவாளிகளில் உள்ளவனாவான்) . (ஆல இம்ரான் : 85)

இன்று பெரும்பான்மை மனிதர்கள் வணங்கும் கடவுள்களை அவதானிப்பவர், ஒருவன் மனிதனை வணங்குவதையும், இன்னொருவன் சிலையை வணங்குவதையும், இன்னொருவன் கிரகத்தை – கோளை- வணங்குவதையும் கண்டுகொள்வான்;. பகுத்தறிவும் சிந்தனைத் தெளிவும் உள்ள ஒருவனைப் பொறுத்தவரை நிறைவான பண்புகளைப் பெற்ற அகிலங்களின் அதிபதியான இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது. அவனைப் போன்ற உயிரினத்தை, அல்லது அவனை விட தரம்குறைந்த ஒன்றை எப்படி அவனால் வணங்க முடியும்? ஆகவே

கடவுள் என்பது மனிதனாகவோ, சிலையாகவோ, மரமாகவோ, மிருகமாகவோ இருக்க முடியாதல்லவா! சிந்திப்போம் நேர்வழி பெறுவோம்.

இன்று மக்கள் வழிபடும் - இஸ்லாம் தவிர்ந்த - அனைத்து மதங்களும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட மதங்கள் அல்லது இறைமார்க்கமாக இருந்து பின்னர் மனித கரங்களால் சிதைக்கப்பட்ட மதங்கள் என்பதால் அவற்றை அல்லாஹ் ஏற்றுக்கொள்ளவதில்லை. இஸ்லாத்தைப் பொறுத்தவரை அது ஒரு போதும் மாற்றத்திற்கு உட்படாத அகிலங்களின் இரட்சகன் அல்லாஹ்வின் மார்க்கமாகும். இந்த மதத்தின் வேத நூல் புனித குர்ஆன், இது அல்லாஹ் இறக்கியருளியதைப் போன்றே பாதுகாக்கப் படுவதோடு, இறுதித்தூதருக்கு இறக்கியருளப்பட்ட அதே மொழியில் இன்று வரையில் முஸ்லிம்களின் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர்கள் அனைவரையும் நம்பி ஏற்றுக்கொள்வது இஸ்லாத்தின் அடிப்படைகளுள் ஒன்றாகும். அவர்கள் அனைவரும் மனிதர்கள். அவர்களை அல்லாஹ் அத்தாட்சிகள் மற்றும் அற்புதங்களினால் பலப்படுத்தியதோடு, இணையே இல்லாத அவனை மாத்திரம் வணங்கி வழிப்படுவதன் பால் மக்களை அழைப்பதற்காக அவர்களை ஒவ்வொரு சமூகத்தாருக்கும் தூதர்களாக அனுப்பி வைத்தான். அந்த நபிமார்களில் இறுதித்தூதராக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இருக்கிறார்கள். முன்னைய தூதர்களின் சட்டதிட்டங்களை மாற்றி இறுதி இறை

சட்டதிட்டங்களுடன் அவரை அல்லாஹ் அனுப்பி வைத்ததோடு, மிகப்பெரும் அத்தாட்சிகள் மூலம் அவரைப் பலப்படுத்தினான். அவற்றுள் மிகவும் உண்ணதமானது புனித அல்குர்ஆன் ஆகும், அது அகிலங்களின் இரட்டசகனின் வார்த்தையாகும். மனித குலம் அறிந்த மிகப்பெரும் உண்ணத நூல். அதன் உள்ளடக்கம், வார்த்தை, வடிவம் அமைப்பு முறை, சட்டதிட்டங்கள் -தீர்ப்புகள்- யாவும் அற்புதமானவை. இம்மை மறுமை மகிழ்ச்சிக்கும் காரணமாக அமையும் சத்தியத்தித்திற்கான நேர்வழி –வழிகாட்டல் அதில் உள்ளது. இது அறபு மொழியில் இறக்கியருளப்பட்டுள்ளது.

இந்த குர்ஆன் சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வின் வார்த்தை, அது மனிதர்களால் உருவாக்கப் பட்டிருக்க முடியாது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பகுத்தறிவு மற்றும் அறிவியல் சான்றுகள் நிறையவே காணப்படுகின்றன.

மலக்குமார்களையும் இறுதி நாளையும் ஈமான் கொள்வது இஸ்லாத்தின் மிகப்பிரதான அடிப்படைகளுள் உள்ளவைகளாகும். இதனடிப்படையில் மறுமையில் மனிதர்கள் மண்ணறைகளிலிருந்து தங்களின் செயற்பாடுகள் குறித்து விசாரணைக்காக மீளெழுப்படுவார்கள். எனவே யார் அல்லாஹ்வை உண்மையான இறைவானாக ஏற்று நற்காரியங்களை செய்கிறாறோ அவர் முஃமினாவார் அவருக்கு சுவர்க்கத்தில் நிரந்தரப் பேரின்பம் உண்டு. யார் அல்லாஹ்வை ஏற்காது புறக்கணித்து தீமைகைளை செய்கிறாரோ அவருக்கு நரகில் மிகப்பெரும் தண்டனை

உண்டு. மேலும் அல்லாஹ் விதித்துள்ள நன்மை மற்றும் தீமை குறித்து ஈமான் கொள்வதும் இஸ்லாமிய அடிப்படைகளுள் ஒன்றாகும்.

இஸ்லாமிய மார்க்கம் ஒரு பூரண வாழ்க்கைத்திட்டமாகும். அது மனித இயல்புணர்வுடனும், பகுத்தறிவுடனும் ஒத்துப் போகும் ஒரு மார்க்கமுமாகும். அதே வேளை சீரான உள்ளமும் அதனை ஏற்றுக்கொள்ளும். அத்துடன் மகத்தான சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வினால் மனிதர்களுக்கு மார்க்கமாக வழங்கப்பட்டது. அத்துடன் இம்மார்க்கமானது அனைத்து மக்களுக்கும் இம்மை மறுமையில் நன்மை மற்றும் சந்தோஷத்தைப் பெற்றுத்தரும் மார்க்கமாகும். இது குறித்த இனத்தவருக்கோ அல்லது குறித்த நிறத்தினருக்கான ஒரு மார்க்கமல்ல. இம்மார்க்கத்தை ஏற்றோர் அனைவரும் சமமானவர்கள். இஸ்லாத்தில் மனிதர்கள் தங்களது நற்செயல்களின் அளவுகோளின் அடிப்படையிலேயே வேறுபடுத்தப்படுவர்.

உயர்ந்தோனாகிய அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :

﴿مَنْ عَمِلَ صَٰلِحًا مِّن ذَكَرٍ أَوْ أُنثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُۥ حَيَوٰةً طَيِّبَةً وَلَنَجْزِيَنَّهُمْ أَجْرَهُم بِأَحْسَنِ مَا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿٩٧﴾﴾

"ஆணாயினும், பெண்ணாயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல்களை எவர் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். மேலும், (மறுமையிலோ) அவர்கள்

செய்து கொண்டிருந்ததைவிட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்". (அன்நஹ்ல் : 97)

அல்குர்ஆன் வலியுறுத்திக் குறிப்பிடும் விடயங்களில் அல்லாஹ்வை ரப்பாகவும் (படைத்து பரிபக்குவ்பபடுத்துபவனாகவும்), கடவுளாகவும் ஏற்றுக்கொள்வதோடு, இஸ்லாத்தை மார்க்கமாகவும் முஹம்மதை தூதராகவும் ஏற்றுக்கொள்வேண்டும் என்பதாகும். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது ஒரு மனிதனைப் பொருத்தவைரை மிகவும் அவசியமான ஒரு விடயமாகும். அதில் தெரிவேதும் கிடையாது. இதற்குரிய விசாரணையும் வெகுமதியும் மறுமையில் உண்டு. ஆகவே யார் அல்லாஹ்வை உண்மையான முறையில் விசுவாசித்து வாழ்கிறாரோ அவருக்கு மகத்தான வெற்றியுண்டு. யார் அவனை மறுத்து வாழ்கிறரோ அவனுக்கு மிகப்பெரும் கைசேதமும் நஷ்டமும் உண்டு.

இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :

﴿... وَمَن يُطِعِ ٱللَّهَ وَرَسُولَهُۥ يُدۡخِلۡهُ جَنَّٰتٖ تَجۡرِي مِن تَحۡتِهَا ٱلۡأَنۡهَٰرُ خَٰلِدِينَ فِيهَاۚ وَذَٰلِكَ ٱلۡفَوۡزُ ٱلۡعَظِيمُ ١٣ وَمَن يَعۡصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَيَتَعَدَّ حُدُودَهُۥ يُدۡخِلۡهُ نَارًا خَٰلِدٗا فِيهَا وَلَهُۥ عَذَابٞ مُّهِينٞ ١٤﴾

"எவர் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்களை சுவனபதிகளில் பிரவேசிக்கச் செய்வான்;. அதன் கீழே ஆறுகள் சதா ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும்

இருப்பார்கள் - இது மகத்தான வெற்றியாகும்.

எவன் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் மாறு செய்கிறானோ, இன்னும் அவன் விதித்துள்ள வரம்புகளை மீறுகிறானோ அவனை நரகில் புகுத்துவான். அவன் அங்கு (என்றென்றும்) தங்கி விடுவான். மேலும் அவனுக்கு இழிவான வேதனையுண்டு". (நிஸாஃ : 13-14).

இஸ்லாத்தினுள் நுழைய விரும்பும் ஒருவர் பின்வரும் வார்த்தையை அதன் பொருளை அறிந்து அதனை ஆழமாக விசுவாசித்து கூறினால்; போதுமானது: அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹ். (அல்லாஹ்வைத் தவிர வேறு உண்மையான கடவுள் எவறும் இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன், மேலும் முஹம்மது அல்லாஹ்வின்; தூதர் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்), இவ்வாறு; அவர் கூறுவதால் முஸ்லிமாக மாறிவிடுகிறார். அதன் பிறகு அல்லாஹ் அவரின் மீது விதித்துள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக இஸ்லாத்தின் ஏனைய சட்ட திட்டங்களை சிறிது சிறிதாக கற்றுக்கொள்ள வேண்டும்.

மேலதிகத் தகவளைப்பெற: https://byenah.com/ta

## பொருளடக்கம்

6இஸ்லாம்........................................................................2

மனித இயல்பு, பகுத்தறிவு, மற்றும் மகிழ்ச்சியினது மதமாகும் ..........................................................................................2

உம்மைப் படைத்தவன் யார்? ...............................................2

அல்லாஹ் எம்மைப்படைத்து விட்டு பின் எம்மைப் பொருட்படுத்தாது புறக்கணித்து விட்டிருக்க முடியுமா? அல்லது இந்த உயிரினங்கள் அனைத்தையும் எவ்வித நோக்கமோ இலக்கோ இல்லாது படைக்கப்பட்டிருக்க முடியுமா?...............................8

இவ்வுலக வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் அவரவர்; செய்த நன்மை அல்லது தீமைக்கான வெகுமதியை -கூலியை- பெறாது கடந்து சென்று விட முடியாது என்பதை நாம் அறிவோம். அவ்வாறு நன்மை தீமைக்கான வெகுமதி இல்லையென்றால் அநியாயக்காரர்களுக்குரிய தண்டனையும் நல்லோருக்கான வெகுமதியும் கிடைக்காமல் போகுமல்லவா?..........................9

❃❃❃

ta368v1.0 - 24/04/2026

جمعية خدمة المحتوى
الإسلامي باللغات